**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், புரட்டாசி திங்கள் 2 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 465/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 254/2022**

ஜோதிமணி ..மனுதாரர்/3ம் பிரதிவாதி

..எதிர்..

1. தேவகி
2. வனிதா ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 12.09.2025ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.உதயசங்கர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.கோபிநாத் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

அசல் வழக்கில் திருத்தம் செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 6 பிரிவு 17ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக கடந்த 04.01.2023ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் வாதிக்கு வயோதிகம் காரணமாக மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அதற்கு தொடர்ச்சியாக வெளியூர் சென்று நாட்டு மருத்துவம் பார்த்து வந்ததால், வாதியின் வழக்கறிஞரை தொடர்பு கொள்ள முடியவில்லை. அதன் பிறகு தற்போது தான் வாதி வழக்கறிஞரை தொடர்பு கொண்ட சமயத்தில் வாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் வாதி பெயரில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**2.2** கடந்த 17.08.203ம் தேதியன்று வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக வாய்தாவை பார்த்தபோது, வாதி சார்பாக வேறு ஒரு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி கடந்த 04.01.2023ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனுவும், எதிர்வழக்குரையும் தாக்கல் செய்திருப்பதும் வாதிக்கு தெரிய வந்துள்ளது. அவ்வாறு வாதி எந்த வழக்கறிஞர் மூலமாகவும் மனுவோ எதிர்வழக்குரையோ தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கறிஞரின் பெயர் வாதிக்கு தெரியாது.

**2.3** வாதி தரப்பில் வேறு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சங்கதிகள் வாதி தரப்பு வழக்கிற்கு எதிரானது என்பதோடு, வாதி தரப்பு எதிர்வாதமும் வாதி விருப்பப்படியும் வாதி சாதகமாகவும் இல்லை என்று வாதி சந்தேகப்பட்டு வாதி தரப்பு வழக்கறிஞர் மூலம் கடந்த 2025 ஏப்ரல் மாதத்தில் நகல் மனு தாக்கல் செய்து பெற்றுள்ளார். அந்த எதிர்வழக்குரை திருப்பூரை சேர்ந்த ஈ.கௌதம் என்ற வழக்கறிஞர் மூலம் வாதி தரப்பு வழக்கிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருப்பூரை சேர்ந்த ஈ.கௌதம் என்ற வழக்கறிஞர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் உரிமையை வாதி தக்க வைத்துள்ளார். வாதி ஏற்கனவே கடந்த 2025 மார்ச்

மாதம் அவரது வழக்கறிஞர் மூலம் வாதி மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய இ.ம.எண்.226/2025ல் மனு செய்து கடந்த 24.06.2025ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**2.4** கடந்த 14.08.2023ம் தேதியில் மேற்படி ஈ.கௌதம் என்ற வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள பல சங்கதிகளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனுவில் கண்டுள்ளவாறு திருத்தம் செய்ய உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

**3.1** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி அசல் வழக்கில் கடந்த 02.11.2022ம் தேதி மனுதாரர்/3ம் பிரதிவாதிக்காக மூத்த வழக்கறிஞர் உயர்திரு. M.உதயசங்கர், M.A., B.L., (MS.No.275/1999) அவர்கள் வக்காலத்து தாக்கல் செய்தும் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கால அவகாசம் பெற்று சென்றுள்ளார். அதற்கு பின்னிட்டு மனுதாரர்/3ம் பிரதிவாதிக்காக நீதிமன்றத்தில் ஆஜாராகவில்லை. கடந்த 24.03.2025ம் தேதி மூத்த வழக்கறிஞர் உயர்திரு.M.உதயசங்கர், M.A., B.L., (MS.No.275/1999) அவர்களே மனுதாரர்/ 3ம் பிரதிவாதிக்காக ஆஜராகி மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் 4 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளுக்கும் மூத்த வழக்கறிஞர் உயர்திரு.M. உதயசங்கர், M.A., B.L., (MS.No.275/1999) அவர்கள் தான் ஆஜாராகி வருகிறார். மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பும் இம்மனுவின் மனுதாரர்/3ம் பிரதிவாதி நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜாராகி வந்துள்ளார். மனுதாரர்/3ம் பிரதிவாதியிடம் தாவா சங்கதிகளை கேட்டு தெரிந்துகொண்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அறிவுறுத்தி மேற்படி சங்கதிகளை மறைத்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.2 மனு சங்கதிகள் அனைத்தும் மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் உருவாக்கபட்ட பொய்யான சங்கதிகள். மேலும் மனுதாரர் அவரது வழக்கறிஞரான திரு.எம்.உதயசங்கர் என்பவருக்கு வழக்கை சரியாக நடத்தவில்லை என்றும். அதனால் வழக்கு கோப்புகளை திரும்ப கொடுக்குமாறு கேட்டும் மனுதாரர் பெயரில் கடிதம் அனுப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். மனுதாரர் அவருடைய ஒப்புதல் இல்லாமல் அனுப்பியிருந்தால், அந்த கடிதத்தை பெற்ற வழக்கறிஞர் உதயசங்கர் அவர்கள் மனுதாரருக்காக அப்பொழுதே அதன் உண்மைகளை கேட்டறிந்து மனுதாரரின் நலனுக்காக அவரை ஏமாற்றி கையெழுத்து வாங்கியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து இருப்பார்,

3.3 மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் பல சங்கதிகளில் திருத்தம் செய்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு திருத்தம் செய்ய கோரியுள்ளவைகள் மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் அனைத்து சங்கதிகளுக்கும் முற்றிலும் எதிரான அர்த்தம் பிறப்பிக்க கூடியதாகவும், எதிருரை முழுவதும் திருத்தம் செய்யும் நோக்கத்தில் உள்ளது. எதிருரையில் வழக்கின் விவாதத்திலுள்ள சங்கதிகள் அனைத்தையும் ஒப்புகொண்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு, தற்போது அனைத்து சங்கதிகளையும் மனு திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. மனுதாரரால் கடந்த 17.08.2023ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துவிட்டு ஒரு வருடத்திற்கு பிறகு அந்த எதிர்வழக்குரை மனுதாரர் ஒப்பதலோடு தாக்கல் செய்யவில்லை என்று கூறி அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக மட்டுமே இம்மனுவினை மனுதாரர்/3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/ 3ம் பிரதிவாதி சட்டதினை தவறாக பயன்படுத்த இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுவினை அனுமதிக்க கூடாது என்று எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், "மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. தீர்வு**

**6.1.** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரருக்கு தெரியாமல் சில சங்கதிகள் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதால் அதனை திருத்தம் செய்ய கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு முரணாக மனு திருத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** அசல் வழக்கானது இறந்து போன ஜீவானந்தத்தின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி என்று விளம்புகை பரிகாரம் கோரியும், ஜீவானந்தத்தின் இறந்து போன மகனின் வாரிசுகள் 5,6 பிரதிவாதிகள் என்று விளம்புகை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கில் கடந்த 16.11.2023ம் தேதியன்று 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கு எதிராக மனு திருத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர்களின் வழக்கறிஞர் சமாதானம் பேசவேண்டும் என்று கூறி, மனுதாரரை அழைத்து, அவரது கையெழுத்துக்களை பல தாள்களில் பெற்று, மனுதாரருக்கு தெரியாமல் அசல் வழக்கில் எதிர்வழக்குரையை வேறு ஒரு வழக்கறிஞரை கொண்டு தாக்கல் செய்துள்ளார் என்று மனுதாரரின் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கதல்ல.

**6.5** கடந்த 16.11.2023ம் தேதியன்று மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு முரணாக மனுதாரர் மனு திருத்தங்களை குறிப்பிட்டுள்ளது **2023ம் ஆண்டு பாரதிய சாஷிய அதினியம், பிரிவு 121ன்** கீழ் முரண்தடை ஆகும் என்பதாலும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் நம்பும்படியாகவும், உண்மைதன்மை வாய்ததாகவும் இல்லை என்பதாலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.09.18 15:10:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.09.18 15:10:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.